சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.12.02.2026.
OS.No.163/2019
PW 1(மறு அழைப்பு) : விஸ்வநாதன் (வயது 68 ) த/பெ.சிங்காரவேலு
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>கு.வி தொடர்ச்சி</u>**

வழக்கின் வாதியும் எனது முதல்வருமான எனது மகனுக்கு வருமான வரி கணக்குகள் உள்ளது என்றால் சரிதான். எனது மகன் செய்து வரும் தொழிலுக்கு என்று தனியாக வருமான வரி உள்ளது என்றால் சரிதான். வழக்கில் காட்டியுள்ள ரூ.2 லட்சம் தொகையை ஒரே நேரத்தில் வாதி அவரது வங்கி கணக்கிலிருந்து செலுத்தும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் இருந்தது என்றால் சரிதான்.

2018 ஆம் வருடத்திற்கான எனது மகனின் வருமான வரி கணக்கை பார்த்தால் ரூ.2 லட்சம் எனது மகனின் வருமான வரி கணக்கில் உள்ளதா என்று தெரியவரும் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து கிரய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு எத்தனை முறை பேச்சு வார்த்தை நடந்தது என்றால் 3 முறை பேசியுள்ளோம்.3 முறை வந்து என்னிடம் நேரடியாக பிரதிவாதி பேசினார்.

எனது மகன் தொழில் செய்து வந்த அலுவலகத்தில் தான் மேற்படி 3 முறையும் பேச்சு வார்த்தை பேசினோம் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் பேச்சுவார்த்தையின்போது எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் பிரதிவாதியுடன் ஒருவர் வந்தார் அவர் பெயர் தெரியாது. வழக்கில் கூறியுள்ள ரூபாய் 2 லட்சம் தொகையை நான் தான் பிரதிவாதியிடம் கொடுத்தேன்.

கிரய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு எத்தனை தினங்களுக்கு முன்பு முன்தொகை கொடுத்தேன் என்றால் ஒப்பந்தம் எழுதிய பின்பு தான் கிரய முன்தொகை கொடுத்தேன். கிரய ஒப்பந்தத்திற்கு முன்பு 3 முறை பேசிய போது, பாஸ்கர் மற்றும் முருகேசன் உடன் இருந்தார்களா என்றால் இல்லை, ஒப்பந்தத்தின்போது மட்டுமே இருந்தார்கள். ஒப்பந்தம் எழுதி முடித்து உடனே பணம் கொடுத்துவிட்டேன்.

வழக்கு சொத்து காலி மனை என்றால் சரிதான். கிரய ஒப்பந்த ஆவணம் தயாரித்தவருக்கு விவரங்களை நான் கூறினேனா என்றால் இல்லை பிரதிவாதி கூறினார். வழக்கு சொத்தை பிரதிவாதி எந்த காலத்திலும் கிரயம் கொடுப்பதற்காக என்னிடம் பேச்சுவார்த்தை பேசவில்லை மற்றும் கிரயத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

கிரயம் பேசியபோது, சதுரடி எவ்வளவு தொகை என்று பேசினோம் என்றால் ஞாபகம் இல்லை. உண்மையில், கிரயம் பேசியிருந்தால் அது பற்றிய விவரம் தெரிந்திருக்கும் என்றால் செண்ட் கணக்கில் கிரயம் பேசினோம். ஒரு செண்ட் ரூ.25,000/- என்று கிரய பேச்சுவார்த்தை பேசினோம். நான் தாக்கல் செய்துள்ள கிரய ஒப்பந்த ஆவணத்தில் ஒரு செண்ட் விலை ரூ.25,000/-என்று எந்த இடத்திலாவது எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

உண்மையில், கிரயம் பேசியிருந்தால் செண்ட் தொகையை பற்றி கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருப்போம் என்றும், கிரயம் தொடர்பான பேச்சுவார்த்தை எழவில்லை என்பதால் தான் அது குறித்து ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி 2016 ஆம் வருடம் எனது மகனிடமிருந்து ரூ.1 லட்சம் கடன் வாங்கியுள்ளார் என்றால் இல்லை. சாட்சி தானாக முன்வந்து எனது மகனுக்கு பிரதிவாதியை தெரியாது என்று கூறுகிறார். அவ்வாறு பிரதிவாதி வாங்கிய கடனுக்கு 2018 ஆம் வருடம் வரை ரூ.100 க்கு மாதம் ரூ.5 வீதம் வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல, அதற்கு ரெக்காடு இல்லை.

பிரதிவாதி எனது மகனிடமிருந்து வாங்கிய கடனை திருப்பி செலுத்தவில்லை என்பதால் பிரதிவாதியை மிரட்டி கிரய ஒப்பந்த ஆவணம் எழுதி வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. ஒரு குற்ற வழக்கு சம்மந்தமாக எனது வீட்டிலிருந்து போலிசாரால் அசையா சொத்து சம்மந்தமான பல ஆவணங்கள் கையகபடுத்தப்பட்டதா என்றால்

சரிதான், எனது ஆவணங்கள் கையகப்படுத்தப்பட்டது. எனது ஆவணங்கள் என்பது நான் கிரயம் வாங்கியதா என்றால் இல்லை எனது பரம்பரை  சொத்துக்கான ஆவணம்.

**குவி தொடர்ச்சி** - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
விஸ்வநாதன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

சார்பு நீதிபதி
இலால்குடி